மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.137/2023

2026ம் ஆண்டு ஏப்ரல் 15ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துலட்சுமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

15.04.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் என் மகள் தான் இந்த வழக்கிற்கு என்னை அழைத்து வந்தார். என் மகள் சொல்லி தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நானாக தான் வந்து சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கிற்கான எதிர் உரை என் மகள் சொல்லி தான் போட்டேன் என்றால் ஆமாம். நான் சொல்லியுள்ள முகவரியில் எத்தனை வருடங்களாக வசிக்கிறேன் என்றால் 39 ஆண்டுகளாக வசிக்கிறேன். இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள பழனாள் என்பவர் இறந்து போன பழனி என்பவரின் முதல் மனைவி என்றால் சரிதான்.

2. 2, 3 வாதிகள் இறந்து போன பழனி மற்றும் பழனாள் ஆகியோர்களுக்கு பிறந்த குழந்தைகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 3ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டுள்ள நான் இறந்து போன பழனி என்பவரின் 2வது மனைவி என்றால் சரிதான். இறந்து போன பழனி மற்றும் எனக்கும் பிறந்தவர்கள் தான் இந்த வழக்கின் 4, 5 பிரதிவாதிகளான ஜீவா மற்றும் சங்கீதா ஆகியோர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதிகள் தங்களையும் 4, 5 பிரதிவாதிகளான எனது வாரிசுகளையும் தான் இறந்து போன பழனி என்பவரின் வாரிசுகளாக அறிவிக்க கோரி உள்ளார்கள் என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் வாதிகளையும் 4, 5 பிரதிவாதிகளையும் மட்டும் இறந்து போன பழனி என்பவரின் முதல்நிலை வாரிசுகள் என்று விளம்புகை செய்ய எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லையா என்றால் ஆட்சேபனை உள்ளது. நான் இறந்து போன பழனிச்சாமியின் 2வது மனைவி என்பதால் நான் அவருக்கு சட்டப்படியான வாரிசாக வர மாட்டேன் என்றால் நான் அவருடன் 40 ஆண்டு காலம் வாழ்ந்துள்ளேன் எனக்கு வாழ்வாதாரம் வேண்டும் என்று கேட்கிறார். நான் பழனிச்சாமியின் முதல் மனைவியான 1ம் வாதி பழனாள் உயிரோடு இருந்த சமயத்திலேயே பழனிச்சாமியை நான் 2வதாக திருமணம் செய்து கொண்டேன் என்றால் எனக்கு திருமணத்தின் போது அந்த விபரங்கள் எதுவும் தெரியாது சொல்லாமல் தான் திருமணம் செய்து கொண்டார்.

4. 1ம் வாதி பழனாள் என்பவருக்கும் பழனிச்சாமி என்பவருக்கும் திருமணம் நடந்த விபரம் தெரியாமல் தான் நான் பழனிச்சாமியை திருமணம் செய்து கொண்டேன் என்ற விபரத்தை நான் தாக்கல்

செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லி உள்ளேனா என்றால் நான் பதில் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதி பழனாள் என்பவர் ஒரு நாச்சிமுத்து என்பவரை திருமணம் செய்ததாக நான் சொன்னது சம்பந்தமாக அவர் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்களா என்றால் அந்த விபரத்தை என் கணவர் தான் என்னிடம் வந்து சொன்னார். தற்போது இது சம்பந்தமாக 1ம் வாதி என் மீது வெள்ளகோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல.

5. என் மகளின் காது குத்து மற்றும் சடங்கு நிகழ்ச்சிகளுக்கு 1 முதல் 3 வாதிகள் தங்கள் குடும்பத்துடன் வந்துள்ளார்கள் என்று சொன்னால் ஆமாம். அது சம்பந்தப்பட்ட பத்திரிகைகளில் பழனிசாமி மனைவி என்ற முறையில் 1ம் வாதி பழனாள் என்பவரது பெயரும் சேர்த்து அச்சடிக்கப்பட்டது என்றால் ஆமாம். தற்போது வரை 1ம் வாதி அவரது மகன்களுடன் தான் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். பழனிச்சாமி இறந்த போதும் அவரது இறுதி சடங்குகளை நானும் 1ம் வாதியும் சேர்ந்து தான் செய்தோம் என்றால் இல்லை நான் மட்டும் தான் செய்தேன். நான் வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் வாதிகளும் நாங்களும் இணைந்து தான் பழனிச்சாமிக்கு இறுதிச்சடங்குகள் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நாங்கள் எதிரிடை கோரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. என் மீது இருந்த ஈர்ப்பு மற்றும் எனது வற்புறுத்தல் காரணத்தினால் தான் எனது பெயர் பழனிசாமி என்பவரின் பணிப்பதிவேட்டில் சேர்க்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது வற்புறுத்தலின் காரணமாகத்தான் 1ம் வாதியின் பெயர் பழனிச்சாமியின் பணிப்பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மற்றும் எதிர்வழக்குரையில் கண்டுள்ள விவரங்கள் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன பழனிச்சாமி என்பவரின் பென்ஷன் மற்றும் இறப்பு பலன்களை நாங்கள் முறைகேடாக அடைவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. இறந்து போன பழனி என்பவருக்கு 1 முதல் 3 வாதிகளும் 4, 5 பிரதிவாதிகளும் மட்டும்தான் சட்டப்படியான முதல் நிலை வாரிசுகள் என்றும் 2ம் மனைவியான நான் மேற்படியாருக்கு சட்டப்படியான முதல்நிலை வாரிசாக வரமாட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு வாதிகள் கேட்டுள்ளவாறு தீர்ப்பாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன பழனி எனது கட்டுப்பாட்டில் இருந்ததால் அவர் இறந்தவுடன் அவரது இறப்பு சான்றிதழில் மனைவி என்ற இடத்தில் நான் எனது பெயரை சேர்த்துக் கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

8. நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு மறுப்பு தெரிவித்து வாதிகள் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் குறிப்பிட்டுள்ள தேதியில் பழனி என்பவரை நான்

திருமணம் செய்து கொண்டேன் என்பதற்கு நான் எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதி நாச்சிமுத்து என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் அவதூறு செய்வதற்காக பொய்யாக அவ்வாறு சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.04.15 18:27:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்